# நிமிர்ந்த விருட்சம்

*1989,*

**இ**ந்திய இராணுவம் வீதிக்கு வீதி முகாம் அமைத்து தமிழ் மக்களை வேட்டையாடிக் கொண்டிருந்த காலம்.

இந்த வேளையில் - எமது விடுதலைப் போராட்டமும் புதியதோர் பரிமாணத்தைப் பெற்றுக்கொள்கிறது. விடுதலைப் புலிகளின் போராட்டத் திறனையும், அவர்களது வீரத்தையும், தியாக உணர்வையும் உலகம் மேன் மேலும் தெரிந்துகொள்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடலாம் அழித்துவிடலாம் எனக் கனவு கண்ட இந்திய வல்லாதிக்கம், எம் மண்ணிலே வேர்விட்டு விழுதெறிந்து நின்ற விடுதலைப் போரிற்கு முகங்கொடுக்க முடியாது, மண் கவ்வியது.

இக்காலத்தில்தான் கப்டன் சந்தியா தன்னை இந்தப் போராட்டத்துடன் முழுமையாக இணைத்துக்கொண்டாள்.

அவள் இப் போராட்டத்துடன் தன்னை இணைத்துக்கொண்டது ஒன்றும் திடீர் முடிவு அல்ல. நீண்ட காலமாகவே அவள் எமது விடுதலைப் போராட்டத்துடன் இணைந்து நின்று, தன் பங்களிப்பை வழங்கி வந்தாள்.

1984 - 1987 காலப்பகுதியிலே 'சுதந்திரப் பறவைகள்' அமைப்பிலே இணைந்து செயற்பட்டாள். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்து வேடிக்கை பார்த்த சமுதாயத்தில் இருந்து, விலங்குடைத்துப் புறப்பட்ட வீரவேங்கை இவள்.

பாலர் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இருந்துகொண்டு சிறுவர்களின் கல்வியில் தனது கவனத்தைச் செலுத்திய அதே வேளை, ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்து, கிராமரீதியாக பின்தங்கிய நிலையிலே வாழ்கின்ற மக்களது நலனிற்காக - குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள் போன்றோரின் ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்காக - உழைத்தாள். இக்காலத்தில் இவள் செய்த வேலைகளை நாம் பட்டியலிட்டுக் காட்டுவது என்பது மிகவும் கடினமான ஓர் விடயம். அந்தளவு தூரத்துக்கு இரவு, பகல் என்று பாராது செயற்பட்டாள் சந்தியா.



**கப்டன் சந்தியா**
**(யோகேஸ்வரி தேசிங்கம்)**
**கொட்டக்காடு,**
**கரணவாய் மேற்கு, கரவெட்டி.**
பிறப்பு:
29.09.1967
வீரச்சாவு:
18.06.1992

தமிழ் ஆவணக்காப்பகம்

இந்திய இராணுவம் எம்மண்ணில் நிலை கொண்டிருந்த நேரத்திலே - இராணுவப் பயிற்சி பெறாத நிலையிலும் - மிகுந்த துணிவுடனும் மன நம்பிக்கையுடனும் செயற்பட்டாள். காயமடைந்த போரராளிகளைப் பராமரிப்பது, போராளிகளுக்குத் தேவையான உணவு, மருந்து, போன்ற பொருட்களைப் பெற்றுக்கொடுப்பது போன்ற வேலைகளில் தன்னுடைய தோழிகளையும் இணைத்துக் கொண்டு செயற்பட்டாள். இதேவேளை, போராளிகளின் 'நடமாடும் தொடர்பு சாதனமாகவும்' சந்தியா இருந்தாள்.

இந்நேரம்தான் சந்தியாவின் மனதை உலுக்கிய அந்தச் சம்பவம் நடந்தது. சந்தியா தன் உயிருக்குயிராக - தன் வாழ்க்கைத் துணைவனாக - நேசித்த மேஜர் சலாம், இந்திய இராணுவத்துடனான மோதல் ஒன்றின்போது, வீரச்சாவைத் தழுவிக்கொள்கின்றார்.

துயரச் சுமை தாங்கமுடியாது சந்தியா துடித்தாள். இறந்தவர்களின் உடல்களுக்கு இறுதி மரியாதைகூட செலுத்த அனுமதியாத அந்நிய இராணுவத்தின் கொடுமை கண்டு, குமுறினாள்.

தனது துயர் இந்த மண்ணுக்கு ஏற்படக் கூடாது. சொந்தங்களைப் பிரிந்து வாழுகின்ற அந்தச் சோகம் எமது மக்களுக்கு ஏற்படக் கூடாதெனில் எம் நாடு விரைவில் விடுதலைபெற வேண்டும் என, வேகம் கொண்டெழுந்தாள். 2 ஆம் லெப். சாலினியையும் கூட்டிக்கொண்டு பயிற்சிப் பாசறை வந்தாள் சந்தியா.

சந்தியாவை முதன்முதலாக எமது போராளிகள் சந்தித்த அந்த நாளை, இப்பொழுதும் எங்கள் தோழிகள் அடிக்கடி நினைவுகூருவார்கள்.

1989 மாசி மாதம், மகளிர் படையணியின் 4 ஆவது பயிற்சி முகாமை நடத்துவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எத்தனையோ தடைகளைத் தாண்டி பயிற்சிக்களம் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள் பெண்கள். சந்தியா பயிற்சிப் பாசறைக்குள் கால்வைத்த நேரம் போராளிகளின் சாப்பாட்டு நேரமாக இருந்தது. சமையல் பகுதியில் போடப்பட்ட மரக் கட்டைகளில் உட்கார்ந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள், ஆளரவம் கேட்டு நிமிர்கிறார்கள். நிமிர்ந்த அனைவரதும் விழிகள் அப்படி...... அப்படியே ஒருகணம் சந்தியாவில் தரித்து நின்றன.

ஆம்! நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் எவர்க்கும் அஞ்சாத தோற்றம் .... இவள்தான் கப்டன் சந்தியா.


விடுதலைப்புலிகள்

குரல் - 31

ஆடி - ஆவணி 1992


எல்லோரது உதடுகளும் இப்பொழுது ஒரேயொரு சொல்லை மட்டும் உச்சரித்தது: ''ஹெவி வெப்பன்''. ஆம்! அவளுடைய தோற்றத்தினையும், அவளுடைய செயற்திறனையும், பார்த்து வியந்த எமது தலைவர், சந்தியாவைப்பற்றி பின்வருமாறுதான் கூறினார். ''சந்தியாவினுடைய தோற்றத்திற்கு ஜி - 3, எம். 16 அல்லது எஸ். எல். ஆர். என்பவை சரிவராது. இவவுக்கு 'ஹெவி வெப்பன்' தான் கொடுக்கவேண்டும்''.

உண்மை. சந்தியா தனது பயிற்சியாலும், செயற்திறனாலும், தலைவரின் பாராட்டுரையைத் தனக்குரியதாக்கிக் கொண்டாள். முதன்முதலாக தலைவரிடமிருந்து '30 கலிபர்' சந்தியாவுக்கு வழங்கப்படுகிறது; அன்றிலிருந்து, அவளை யாரும் சந்தியா என்று அழைத்தது கிடையாது; 'ஹெவி வெப்பன் சந்தியா' என்பதே அவளுக்குரிய பெயராய் மாறிவிட்டது. காட்டுக்குள்ளே தனது பயிற்சியைச் சந்தியா மேற்கொண்டிருந்தவேளை, வெலிஓயா இராணுவ முகாம் மீதான தாக்குதலுக்கு எம்மால் திட்டமிடப்பட்டது. இவ்வேளை தானும் சண்டைக்கு வரவேண்டும் எனச் சண்டையிட்டாள். இறுதியில் இவளும் இன்னும் சிலரும் உதவிப் படையணியாக அனுப்பப்பட்டனர். காயப்பட்ட போராளிகளையும், வென்றெடுக்கப்பட்ட ஆயுதங்களையும் சுமந்தபடி பாசறை திரும்பினாள். அன்றுதான் முதன்முதலாக இவளது பேராற்றல் எல்லோராலும் உணரப்பட்டது.

பயிற்சிக் காலத்தில் இவளுடன் கூடித் திரிவது என்பது எல்லோர்க்கும் மிகவும்

விருப்பமான விடயம். தன் கண்முன்னால் ஒரு போராளி கஷ்டப்படுவதை இவள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டாள். எல்லோருடைய கஷ்டங்களையும் தானே சுமக்க முன்வருவாள். தன்னுடன் பாரம் தூக்க வருபவரிடம் எப்பொழுதும் சிறிய பொருட்களைக் கொடுத்த பின், பெரியமூடைகளைத் தான் மிகவும் இலாவகமாகத் தோளில் அடித்தபடியே, "கொக்குளாய்க் காட்டுக்குள்ளே பெட்டியைத்தான் தூக்கவா'' என்று பாடியபடியே வருவாள்.

பாசறையில் கலகலப்புக்குப் பேர்போனவள் சந்தியா. சந்தியா இருக்குமிடத்தில் எப்பொழுதும் பாட்டுச் சத்தம் கேட்டபடிதான் இருக்கும். ''புதுயுகம் எழுகுது, பூவையரே விழித்தெழுக'' என்று ஒருபாடலை, தானே இசையமைத்துப் பாடினாள் சந்தியா.

எந்தவொரு கஷ்டமென்றாலும் அதனை வேடிக்கையாக்கி மகிழ்வது இவளுடைய இயல்பான சுபாவம். காட்டு வாழ்வின்போது அடிக்கடி குளிக்க முடியாது. ஆரம்பத்தில் எல்லோருக்கும் இதனைத் தாங்கிக்கொள்வது என்பது கஷ்டமாகத்தான் இருந்தது. குளிக்கத் தண்ணீர் இல்லாவிட்டாலும் முகமாவது கழுவவேண்டும் என்றபடி, மரங்களின் இலைகளில் தங்கி நிற்கின்ற சிவிர் நீரைக் கைகளால் தொட்டு எடுத்து, முகம் கழுவுவாள். இதுவே எல்லோருக்கும் வேடிக்கையாகவும் மனதைச் சமாதானப்படுத்துவதாகவும், அமைந்துவிடும்.

காட்டுக்குள்ளே தனது பயிற்சி வாழ்க்கையை முடித்துக்கொண்டு ஊருக்குள் காலடி வைத்தபோது ஏற்பட்டிருந்த தற்காலிக அமைதியின்போது, தனது தோழிகள் ஒவ்வொருவருக்கும் சந்தியா சொல்லுவாள்; ''என்ன அம்மான் சிறீலங்கன் தமிழ் மக்களுக்குரிய நியாயமான தீர்வை நிச்சயம் வழங்குவான் என்று எதிர்பார்க்கிறீர்களா? இதுதான் அம்மான் ஆபத்தான காலம். போரும் இல்லாமல், சமாதானமும் இல்லாமல் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்ற காலம். இதற்கு நாம் இடம் வழங்கக்கூடாது. எமது இலட்சியத்தில் உறுதியாக நிற்க வேண்டும்''.

மீண்டும் சிறீலங்கா தமிழ்மக்கள் மீதான இராணுவ வன்முறைப் பேரரைத் தொடர்ந்தபோது, கந்கோவளம் பகுதியில் குழுவொன்றின் தலைவியாகப் பொறுப்பேற்று நின்றாள்.

இவளது துப்பாக்கி எதிரிக்குப் பதில் சொல்லாத இடமே இல்லை என்று கூறலாம். அந்தளவு தூரத்துக்கு, எங்கெல்லாம் தாக்குதல் நடக்கிறதோ அங்கெல்லாம் சந்தியா நிற்பாள்; அவள் துப்பாக்கி எதிரிக்கு விடை தரும்.

பலாலி, கோட்டை, மாவிட்டபுரம், காரைநகர், ஆனையிறவு...... என்று இவளது தாக்குதற் பட்டியல் விரிந்து செல்லும்.

ஆனையிறவுச் சமரின்போது, இவள் ஜி. பி, எம். ஜி. வைத்திருந்தாள். அவள் அதைத் தோளிலே வைத்துக்கொண்டு செல்லும்போது...... இப்போதும் எங்கள் கண்முன்னே, கோட்டை அதிர நடக்கின்ற சந்தியாவின் தோற்றம் நிழலாடுகிறது.

போதிய உணவோ நீரோ இல்லாத நிலையிலும் சோர்வடையாது நின்று, ஆனையிறவுச் சமரிலே சந்தியா போரிட்டாள். இத்தாக்குதலிலே மிகவும் நெருங்கிய தூரத்திலே எதிரியை எதிர்கொள்ளும் வேளையிலே, இவளது ஜி பி, எம். ஜி. செயலிழந்துவிடுகிறது. அந்த இடத்தில் சிறிதுகூட அவள் மனம் தளரவில்லை. தனக்கு அண்மையில் காயமடைந்த நிலையில் இருந்த ஆண் போராளி ஒருவரைத் தனது ஒரு தோளிலும், இன்னொரு தோளில ஜி. பி. எம். ஜியுமாக நடந்துவந்த தோற்றத்தைப் பார்த்த எமது தோழர்கள், "உது சந்தியாவால்தான் முடியும்'' என்று வியந்தார்கள்.

தனது செயலிழந்த ஆயுதத்தைத் தனது ஆயுத உதவியாளரிடம் ஒப்படைத்துவிட்டு, அவரது ஆயுதத்தை எடுத்துக்கொண்டு, மீண்டும் சென்று மோதினாள். இந் நிலையில்தான் சந்தியா வயிற்றில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகிறாள்.

வைத்தியசாலையில் காயப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்ட எமது போராளிகள் சத்திரசிகிச்சை முடிந்த நிலையில், மயக்கம் முற்றாகத் தெளியாதநிலையில், களத்தில் நின்ற மனவேகம் குறையாது தன்னிலையில் கத்திக்கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு போராளியினதும் இதயதாகத்தை - அவர்களது உயிர் மூச்சை - இந்நிலையில் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம்.

மயக்க நிலையில் சந்தியா கத்திக்கொண்டிருந்தாள்: ''அண்ணை என்னை விடண்ணை.

நான் கரும்புலியாகப் போகப்போறன். என்னை விடண்ணை'' என்று, இடைவிடாது ஒலித்துக்கொண்டிருந்தாள்.

இந்த மனோபாவமும் வேகமும் தியாக உணர்வும்தான், இன்று எங்களது விடுதலைப் போரை உலக அரங்கிற்கு எடுத்துக்காட்டியிருக்கிறது.

வைத்தியசாலையில் இவள் இதனைத் தவிர வேறெந்த நிலையிலும் கவலைப்பட்டதே கிடையாது. ''எனக்கு இதுவும் ஒரு காயமா'' என்றபடி, காயமடைந்த ஏனைய போராளிகளின் தேவையைக் கவனிப்பதில் ஈடுபடுவாள்.

மீண்டும் பல முனைகளிலும் சிறீலங்கா இராணுவம் தனது தாக்குதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியது. எமது வீரர்களும் 'எதிரியை அழிக்காது விடமாட்டோம் என்ற ஆவேசத்துடன் நின்றனர். எதிரியை ஒரு அங்குலமேனும் நகரவிடமாட்டோம் என்ற ஆவேசத்துடன், கோட்டையில் சந்தியாவின் குழு......

மண்டைதீவு இராணுவம் கோட்டையை நோக்கித் தாக்குதல் தொடுக்கும் நேரங்களில் எல்லாம் சந்தியாவைத்தேடி மக்கள் படை வந்து சேரும். சந்தியாக்கா எப்படி இருக்கிறா என்று பார்த்துப் போனால்தான் அவர்கள் மனம் ஆறுதல் அடையும். அங்கே...... போர்வரின் புளகித்துப்போய் நிற்பார்கள்; அவளின் அன்பான வார்த்தைகளால் நிறைவடைந்து மீண்டும் செல்வார்கள்.

அந்தளவு தூரத்துக்கு இவள் நேசித்த மக்கள் இவளை நேசித்தார்கள். தான் நேசித்த இந்தத் தேசத்தின் விடியலுக்காக, எங்கள் சந்தியா தன்னை அர்ப்பணித்துவிட்டாள்.

18. 06. 1992 அதிகாலை 5.40 மணி, மண்டைதீவு இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலின்போது மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில், கப்டன் சந்தியா வீரச்சாவைத் தழுவிக்கொண்டுவிட்டாள். எந்த மண்ணை நேசித்தாளோ அந்த மண்ணின் விடிவுக்கான வித்துக்களைத் தூவிவிட்டுச், சென்றுவிட்டாள்.

ஆம்! தன்னுடைய 'முதல் நன்மைக் கொண்டாட்டத்தின்போது சந்தியாக்காவிடம்தான் நான் கைவிசேடம் வாங்குவேன்' என்று ஆசையுடன் காத்திருந்த...... கோட்டை வாயிலில் ஏக்கம் ததும்பிய விழிகளுடன் சந்தியாவைத் தேடி நிற்கின்ற - ஒன்பது வயதுச் சிறுவன் ஜோனைப் பார்க்கிறேன்...... எம் மண் விடுவிக்கப்படும்வரை போராட்டம் தொடரும் என்பதன் சாட்சியாய்.

— ஜெயா ☆

## அக்கினிக் குஞ்சுகள்

வேறுபாடற்ற  
விடியலை வென்றெடுக்க  
துப்பாக்கிகளோடு இவர்கள்  
துயிலெழுந்துவிட்டார்கள்;  
பாகுபாடு இல்லாது  
படைதிரண்டு செல்கிறது.  
அந்தோ......  
அந்த  
அக்கினிக் குஞ்சுகளின்  
அணிவகுப்பில் - எதிரிப்படை  
எரியுண்டு போயிற்று.

— கப்டன் கஸ்தூரி